RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-222911

OPEN ACCESS

# இராஜம்கிருஷ்ணன் குறிஞ்சி தேனில் உளவியல் சிந்தனை

அ. லட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர்கல்வி நிறுவனம், கோயமுத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# Psychological Thought in Rajamkrishnan's Novel Kurinji Thaen

**A. Lakshmi** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: lakshmipoomesh@gmail.com

Received: 18-09-2022
Revised: 06-11-2022
Accepted: 10-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

In the novel Kurinji Thaen, Paru, Jogi, Rangan, Girijai and Krishnan are acquaintances of each other from childhood, but at the age of marriage, the psychological concept of Oedipus lust emerges. Paru and Krishna fall in love first. Then Rangan comes to know about it and destroys Paru's dream thinking that he is taking revenge on Krishna. Krishna and Paru seek to unite with each other through mental unity. But Rangan separates them under the influence of his unconscious mind. Rangan, who does not like Krishna's influence and personality, marries Paru to control him, and Paru also marries Rangan out of necessity. But she was thinking of Krishna in her mind so she could not engage in a proper domestic life with Rangan. Rangan turns out to be the same and stays away from Parur. Rangan also leaves Paru and starts living with another woman. It is this love triangle that faces many struggles and manifests itself as Oedipus' lust. Paru's younger sister Krijai dies soon after Nanjan born. So Paru brings up Nanjan. Freud says that Paru's great affection for Nanjan is the secondary response myth of the mother-self relationship, which Freud has pointed out as Oedipus' lust in consciousness. This article is to explain this concept in detail.

**Keywords:** Kurinji Thaen, Rajamkrishnan, Psychological Concept, Influence, Personality

## முன்னுரை

முதல் நிலை பதிலிப் புனைவாக பாருவும் கிருஷ்ணனும் இருக்கின்றனர். இரண்டாம் நிலை பதிலிப் புனைவாக பாருவும் கிருஷ்ணனும் முற்பட நினைக்கின்றனர். ஆனால் தங்களின் உறவான கிரிஜையின் மகன் நஞ்சனும் கிருஷ்ணனின் மகளான விஜயாவும் இரண்டாம் நிலை பதிலிப் புனைவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் நிலை பதிலிப் புனைவாக பாருவும் நஞ்சனும் விஜயாவும் சுழன்று வருகின்றனர். குழந்தையிலிருந்து நஞ்சனை வளர்க்கிறாள. ஆசையும் பாசமும் காட்டி தன் உறவாகவும் தன்னுடைய வாழ்க்கையின் பற்றுக்கோடாகவும் நஞ்சனை மட்டுமே அவள் நம்பி வாழ்கிறாள். அந்த உறவு இன்னொருத்தியின் கையில் சேருகிறது. அந்நிலையில் தாயின் மனப் போராட்டத்தை நனவிலி மனத்திலிருந்து வெளிப்படுகிறது. அதை வெளிப்படுத்தும் விதமாக பாரு நஞ்சனின் காதலை மறுக்கிறாள். இதுவே இடிப்பஸ் காமம் என்று பிராய்டு கூறிய உளவியல் சிந்தனையாக இந்நாவலில் சுழன்று வருகிறது.

## பாருவின் நனவுமனம்

'ஆகா! சேலை உடுத்திச் சிங்கார ரவிக்கை அணிந்து, கொண்டையும் பூவுமாய் வந்திருக்கிறாளே, கிருஷ்ணனின் மனைவி, தேன் மலைக்காரி! நெற்றிப் பச்சைக் குத்துச் சின்னங்களுக்கு நடுவே குங்குமம், மூக்கிலே சுடர்விடும் வைர மூக்குத்தி, காதுகளில் பொன் வளையங்களுக்குப் பதில் மாதுளம் முத்துக்களைப் போல் ஒளிரும் கெம்புக்கல் தோடுகள், கழுத்திலே அட்டிகை, பதக்கம், கைகளில் பொன் வளையல்கள், மணி மணியாகப் பெண்ணொன்றும் ஆண்ணொன்றும் பெற்று விட்டதாய்.'

பாரு கிருஷ்ணன் மீது காதல் வைத்திருந்தாலும் அவள் அண்ணனுக்கும் குடும்பத்திற்கும் கட்டுப்பட்டு ரங்கனைத் திருமணம் செய்து கொள்கிறாள். ரங்கனோ அவள் மீது சரியான அளவில் பாசம் காட்டுவதில்லை. அந்த ஏக்கத்திலும் மனப்போராட்டத்திலும் வாழ்கிறாள். கிருஷ்ணனுடன் வாழும் பாக்கியம் தனக்குக் கிட்ட வில்லையே என்ற ஏக்கத்தைத் தன் காதலனின் மனைவியான தேன் மலைக்காரியைப் பார்த்து பொறாமைப் படுகிறாள். அதை எடுத்துக்காட்டும் விதமாக பாருவின் மனநிலை சித்தரிக்கப்பட்டுள்ளது.

“மூல வடிவம் = முதல் நிலை பதிலிப் புனைவு = இரண்டாம் நிலை பதிலிப் புனைவு. இம்மூன்றையும் முறையே பின்வரும் மூன்று கருத்தாக்கங்களோடு சமன் செய்யலாம் அவையாவன

1. மூல வடிவம் = இடிப்பஸ் காமம்
2. முதல் நிலை பதிலிப் புனைவு = தலைவன் தலைவி காம உறவு
3. இரண்டாம் நிலை பதிலிப் புனைவு = கருப்பொருள் தாய் - சேய் உறவு

ஆக, இடிப்பஸ் காமம் = தலைவன் தலைவி காம உறவு = கருப்பொருள் தாய் - சேய் உறவு என்றாகிறது."

இங்கு பாரு கிருஷ்ணன் மீது காதல் உணர்வு கொண்டிருந்தாள். இதுதான் இடிப்பஸ் காமம். ஆனால் இந்த இடிப்பஸ் காமம் நிறைவேறாமல் ரங்கனால் தடைப்பட்டது. அந்த வேதனையை வெளிப்படுத்தும் விதமாக பாருவின் மனநிலையானது வெளிக்காட்டப்பட்டுள்ளது. பாருவின் மனநிலையும் இடிப்பஸ் காமமும் சமநிலையில் உள்ளது (Rajam Krishnan, 2011).

## ரங்கனின் நனவிலி மனம்

'சட்! சனியன் பிடித்தவள். அந்தப் பாரு வந்த வேளை. அவன் கையில் முன் போல் காசே தங்குவதில்லை. பணம் என்னவோ ஆயிரம் கணக்கில் வருகிறது. ஆனால் ஆயிரமாகவே போகிறதே! வெறியும் குழப்பமும் சேர்ந்த அந்த நிலையில், பாரு தான் அவன் முன் தோன்றிக் கோப வெறியாக பொறாமை வெறியாக ஊதி விட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்குப் போய் அத்தனைக் கனவு கண்டான்! அவளைக் கட்டினால் அந்தக் கிருஷ்ணன் பயலின் கர்வம் குறையும்மென்று மனப்பால் குடித்தேன்! அவன் மாடி வீட்டில், அதே நேரத்தில் கொக்கரிக்கிறானே!”

ரங்கனின் மனநிலை விரித்து காட்டப்படுகிறது. அவன் பாருவை ஆசைப்பட்டு திருமணம் செய்ய வில்லை என்றும் கிருஷ்ணனைப் பழிவாங்குவதற்காகவே அவளைத் திருமணம் செய்து இருக்கிறான் என்பதை அவன் மூலமாகவே சுட்டப்பட்டுள்ளது. அதனால் தான் பாருவிடம் அவன் மிகுந்த அன்புடன் இருந்ததாகவே தெரியவில்லை. பாருவையும் கிருஷ்ணனையும் தவறாக எண்ணும் போக்கும் அவன் மனதில் தோன்றியதைப் பற்றி கூறப்பட்டுள்ளது (Rajam Krishnan, 2011).

“நனவிலிமன எண்ணங்கள் என்பவை நனவு மனத்தால் (Conscious Mind) தொடமுடியாதவை ஏனெனில் நனவிலி எண்ணங்கள் முற்றிலும் இறுகியும் (உருக வடிவம் /Metaphorical)) இடம் பெயர்ந்தும் (வேறொன்றாதல்/ Displacement) நனவு மனத்தின் வழி வெளி வருவதால் நனவு மனத்திற்கு நனவிலிமன உணர்வுகள் இன்ன தென்பது புரியாது. இந்த நனவிலி மனப்பகுதியில் இச்சை உணர்ச்சிகள் (Id) தன்னிலை மன உணர்வுகள் (Ego) பண்பாட்டு மன உணர்வுகள் (Super Ego) ஆகியவற்றின் பெரும் பகுதி உணர்வுகள் கலந்துள்ளன. இந்த நனவிலி மனமே மனித நனவுமனதிற்கு அடிப்படையானதாகவும் மன

இயக்கத்தின் மூல காரணியாகவும் விளங்குகிறது. நனவிலி மனம் பற்றிய உண்மை கனவு ஆராய்ச்சி மற்றும் மன நோய் மருத்துவ ஆய்வின் வழி பிராய்டால் கண்டறியப்பட்டது." என்று ஆய்வுகள் கூறுகின்றன.

ரங்கன் சிறுவயதிலிருந்தே கிருஷ்ணனின் மீது பொறாமை கொண்டு இருப்பதை இந்த நனவு மனம் வெளிப்படுத்தி உள்ளது. நனவிலி மனத்தில் அவன் என்ன நினைத்தானோ அதை அவன் பெரியவன் ஆகியவுடன் பாருவிடம் காட்டுகிறான். கிருஷ்ணன் தன்னைவிட வசதி வாய்ப்பில் பெரியவன் படிப்பில் பெரியவன் என்பதை அவன் நனவிலி மனதில் ஆழ பதிய வைத்துக் கொள்கிறான். அதன் வெளிப்பாடாக பாரு கிருஷ்ணனின் காதலை முறியடிக்கிறான். பாருவையும் மனதளவில் துன்புறுத்துகிறான். இறுதியில் அவளுடன் வாழ முடியாமல் வேறு ஒரு பெண்ணுடனும் வாழ்கிறான். இந்த மனநிலையே ஃபிராய்ட் நனவு மனம், நனவிலி மனம் என்று பிரித்து காட்டியுள்ளார்.

## முதல் நிலை பதிலிப் புனைவு

'கிரிஜையிடமும் ஜோகியிடமும் அவன் கண்ட சிறப்புகளில் ஓர் அம்சம் கூட பாருவிடம் நெருங்கி வாழ்ந்த புதுமண நாட்களில் காணவில்லை. அவள் கண்களில் வெல்ல முடியாத ரகசியங்களையோ, சிரிப்பிலே அவனைச் சிலிர்க்க வைக்கக்கூடிய கவர்ச்சியையோ ஒரு நாள் கூட அவன் காணவில்லை. அவர்களுடைய இல்லற வாழ்வின் பயனாக உதித்த செல்வங்களை, இறைவன் வளர்த்தும் மலராமலும் எடுத்துக் கொண்டான். ஆனால் பனிக்காலத்தில் பட்டமரம் வசந்தம் வந்ததும் தளிர்க்கவில்லையா? பூக்கவில்லையா?”

ரங்கன் கிரிஜையையும் ஜோகியையும் நிலத்தில் வேலை செய்யும் பொழுது பார்க்கிறான். அவர்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு பாருவின் மேல் ஒரு ஈடுபாடு வருகிறது. தாங்கள் திருமணம் செய்த அந்நாட்களிலும் இதுபோல் மகிழ்ச்சியாக இருந்ததில்லை அதற்குக் காரணம் சரியான அன்பும் பாசமும் அவள் மீது தான் வைத்திருக்கவில்லை என்றும் அதேபோல் அவளும் தன் மீது வைத்திருக்கவில்லை என்றும் அவன் உணர்கிறான். இதற்கு காரணம் அவன் அவள் மீது ஆசை கொண்டு திருமணம் செய்யவில்லை. கிருஷ்ணனைப் பழிவாங்கவே அவளைத் திருமணம் செய்து கொண்டான். அதனால் இருவரின் மனமும் ஒத்துப் போகாமல் ஆனால் சமூகத்திற்காக திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர் என்பதையே இங்கு சுட்டி காட்டப்பட்டுள்ளது (Rajam Krishnan, 2011).

“கூட வேட்கைகள் வெளிப்படும்போது ஏதேனும் ஒரு வகையில் மறைப்பு நிகழும். இத்தகு மறைப்பு மனத்தொழில் நுட்பத்தை 'மனதற்காப்பு நடவடிக்கை' தகாத ஆசைகள் இவ்வாறு நுட்பமாக மறைந்து வெளிப்படும்போது அதற்குக் கலை இலக்கியம் என்ற பெயரில் சமூக ஏற்புடமை கிடைக்கிறது." (Aranga Nalli, 2019).

## நஞ்சனின் இடிப்பஸ் காமம்

'நஞ்சனின் ஆத்திரம் அடங்கிவிடவில்லை. பெண் பிள்ளைகளா இருந்தால் நியாயம் இல்லாமல் நடக்கலாமோ? அடுத்த பஸ் ஒரு மணி தாமதமாகப் போகும். என் இடத்தைக் காலி பண்ணச் சொல்லுங்கள் என்றான். இளைஞனுக்கு உரிய ரோசத்துடன் அவள் விடுக்கென்று எழுந்து ஓரமாக ஒதுங்கினாள். நீங்கள் உட்காரலாம், உங்கள் இடத்தில் என்றாள் ஆங்கிலத்தில்.”

கிரிஜையின் மகன் நஞ்சன். கிரிஜை இறந்தவுடன் பாரு அவனை வளர்க்கிறாள். அவன் பெரியவனாகி தன்னுடைய ஊருக்கே இன்ஜினியராக வருகிறான். அப்போது கிருஷ்ணக் கௌடரின் மகளான விஜயாவைப் பேருந்தில் பார்க்கிறான். அப்பொழுது இருவருக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. அந்த மோதலே இறுதியில் காதலாகவும் மாறுகிறது.

## இரண்டாம் நிலை பதிலிப் புனைவு

'சாந்தத்தின் உருவமாக அத்தனை நாட்கள் காட்சி தந்த நஞ்சனின் தந்தை வெறிபிடித்தவர் ஆகிவிட்டாரா என்ன, ஆத்திரக்காரர் ஆகி அறிவு கலங்கியவர் ஆகிவிட்டாரா அப்பா! என்று நஞ்சன் பதறினான்."

சில காலங்களுக்கு முன்பு ஜோகியின் நிலத்தைப் பள்ளி கட்டுவதற்காக கிருஷ்ணன் வந்து கேட்டதும் அவர் தந்தை கொடுக்க மாட்டேன் என்று சண்டையிட்டார். அதன் பிறகு தன் மாமா ஊருக்கு ஜோகியும் பாருவும் குழந்தை நஞ்சனும் வருகின்றனர். ஜோகியின் நிலத்தை மறுபடியும் கிருஷ்ண கௌடர் பாலம் கட்டுவதற்காக கேட்பதாக கேள்விப்பட்டதும் ஜோகி ஆத்திரத்தில் கத்துகிறான். அதை கண்ட நஞ்சன் அவன் தந்தையின் மறு உருவத்தைக் கண்டு பதறிப் போகிறான். இங்கு இரண்டாம் நிலை பதிலிப் புனைவு வெளிப்படுகிறது. இடிப்பஸ் காமத்தின் வெளிப்பாடாககிருஷ்ணன் மீதும், இரண்டாம் நிலை பதிலிப் புனைவின் தாக்கமான தாய்-சேய் உறவும் ஜோதியின் ஆத்திரமாக வெளிப்படுகிறது.

## இடிப்பஸ் காமத்தின் வெளிப்பாடு

'அவள் செவிகளில் பூமியைத் துளைக்கும் பேரிடி விழுந்ததா? உடல் குலுங்கி அதிர்ந்தது. ராமன் பொருட்படுத்தாமல் பேசினான் கிருஷ்ண கௌடர் வீட்டுப் பெண் தான். நஞ்சன் அதிர்ஷ்டக்காரன். அவனைக் கட்டுகிற அவளும் அப்படித்தான் பழனி மலை வேலன் சந்நிதியில் கல்யாணம். நெஞ்சைச் சுருக்கிட்டுப் பிடிப்பது போல் பந்தாக அடைத்தது அவளுக்கு. அவன் சூழ்ச்சி, அவன் வீட்டுப் பெண் தானே? சதிகாரி என் மகனை உயிரோடு எடுத்துக் கொண்டாளே! என்று அலறுகிறாள்.

பாரு நஞ்சன் மீது கோபப்படுகிறாள். விஜயாவை நஞ்சன் காதலிக்கிறான் என்பதை இராமன் கூறியபோதுஅவளுக்கு மிகுந்த கோபம் வருகிறது. ஏனென்றால் தன்னைக் காதலித்து விட்டு இன்னொருத்தியைக் கல்யாணம் செய்தவன் கிருஷ்ண கௌடர். தன் வாழ்க்கையை இந்நிலைமையில் கொண்டு வந்தவன் கிருஷ்ண கௌடர். அதனால் அவனின் மகனான விஜயாவை அவள் வேண்டாம் என்று வெறுக்கிறாள். அது மட்டுமல்லாமல் பணம் மிகுதியாக உள்ள கிருஷ்ண கௌடரின் மகளைத் தன் மகனுக்குக் கட்டித் தர அவளுக்கு விருப்பமில்லை. ஆனால் நஞ்சனோ அவளையே திருமணம் செய்வதாக கூறுகிறான்.

'வாழ்தல் உயிர்க்கு அன்னள்ஆயிழை சாதல்

அதற்குஅன்னள் நீங்கு மிடத்து'

பகற்குறியில் வந்து தலைவன் புணர்ந்து செல்வான். அப்போது தலைவியானவள் வாழ்வதற்கு சமமாக கருதுவாள் (Puliyur Kesigan, 1976). அதுவே அவனைப் பிரிந்தால் சாவதற்குச் சமமாக அவள் எண்ணுவாள். இக்கருத்தை உடைய திருக்குறளை நஞ்சன், விஜயா அவர்களின் காதல் உணர்வு வெளிப்பாட்டை கொண்டு அறிய முடிகிறது.

வள்ளுவனின் வாக்குக்கு ஏற்றார் போல நஞ்சனும் விஜயாவும் திருமணப் பந்தத்தில் இணைய விரும்புகின்றனர். அந்த காதல் திருமணத்தை முடிக்க அவனின் மாமனும் துணை நிற்கிறான். இவ்வாறு உளவியல் அடிப்படையில் இடிப்பஸ் காமமானது இங்கு வெளிப்பட்டுள்ளது.

"கற்பூரம் நாறுமோ? கமலப் பூ நாறுமோ?

திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ?"

மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச் சுவையும் நாற்றமும் விருப்புற்று கேட்கின்றேன் சொல் ஆழி வெண் சங்கே. காண்பவை எல்லாம் காயும் கனியும் திருமாலாகவே ஆண்டாளுக்குக் காட்சி தருகின்றன. கண்ணன் ஓதும் சங்கைப் பார்த்து ஆண்டாள் காதலால் புலம்புவதை இப்பாடல் வெளிப்படுத்தியுள்ளது.

ஃபிராய்டின் இடிப்பஸ் காமமானது ஆண்டாளின் பாடலின் வழி வெளிப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு இடத்திலும் காதலின் உணர்வுகளை உளவியல் வழி நோக்கினால் நமக்குப் ஃபிராய்டின் உளப்பகுப்பாய்வு விளங்குகிறது (Aranga Nalli, 2019).

நனவிலி + நனவு = வெளிப்பாடு

'குண்டு பட்டதா? ஓ! ஐயனும் அந்த முட்டாள் மனிதர்களில் ஒருவராக எங்கே நின்றாரோ? அப்படி நினைக்கையிலே உடலில் சிலிர்ப்பு ஓடியது நஞ்சனுக்கு.'

நஞ்சன் விஜயாவை பழனி கோவிலில் திருமணம் செய்வதற்காக அழைத்து செல்கிறான். அதற்குத் துணையாக நஞ்சனின் மாமன் இருக்கிறான். பாரு அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறாள். நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு அணை கட்டுவதாக இருந்தது. அதற்காக நிலத்தைப் பறிகொடுத்தவர்கள் போராட்டத்தை நிகழ்த்துகின்றனர். அதில் ரங்கனும் ஜோகியும் இணைகின்றனர். அப்போது அங்கு குண்டு பாயும் சத்தம் கேட்கிறது. அதைக் கேட்டவுடன் நஞ்சன் பதறி ஓடுகிறான். அங்கு ரங்கன் இறந்து கிடக்கிறார். வாழ்க்கையே போராட்டமாக இருந்த ரங்கனுக்கு இறுதியில் தியாகி என்ற பட்டத்துடன் தன் உயிரைத் தியாகம் செய்தான்.

ரங்கன் தன் நனவிலிமன செயல்பாட்டால் இதுவரை செய்த குற்றங்களுக்குத் தீர்வாக போராட்டத்தில் தன் உயிரைத் தியாகம் செய்கிறான். நனவிலி மனத்தின் செயல்பாடாக நனவு மனத்தில் வெளிப்பட்ட செயல்களுக்குத் தன்னையே அர்ப்பணிக்கிறான்.

## முடிவுரை

இந்நாவலில் பாரு, கிருஷ்ணன், ரங்கன் இவர்களின் முக்கோண வடிவிலான காதல் ஃபிராய்டு கூறிய இடிப்பஸ் காமமாக புலப்படுகிறது. ரங்கனின் நனவிலி மனமே அவர்களின் காதலைப் பிரிக்கிறது. பாருவின் நனவிலி மனமே நஞ்சன், விஜயாவின் காதலை ஏற்றுக் கொள்ள முடியாமல் தடுக்கிறது. இறுதியில் ரங்கனின் நனவிலி மனப்போராட்டத்தில் உயிர் தியாகம் செய்கிறான். இவ்வாறு நனவிலி மனப்வெளிப்பாடு நனவு மனத்தின் வெளிப்பாடாக உளவியல் சிந்தனையாக பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு கதாபாத்திரத்தின் நனவிலி மனத்தின் வெளிப்பாடு அவர்களின் வாய்மொழி சொற்களாக நாவல் முழுவதும் வெளிப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

## References

Aranga Nalli, (2019) Sanga Ilakkiyam Oru Freudian Ullpaguppaivu Vaasippu, Parisal Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (1976) Thirukural Parimelalhagar Urai, Poompugar Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2011) Kurinji Thaen, Nam Tamilar Pathippgam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License